# விடியல்
## The Dawn

இதழ்-76, ஆகஸ்ட்-2015


கௌரவ ஆசிரியர்
முனைவர். வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

ஒருங்கிணைப்பு
முனைவர். சி. ஆர். சுரேஸ்
துறைத்தலைவர்

ஆசிரியர் குழு
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

தட்டச்சு & இதழ் வடிவமைப்பு
திரு. செ. தங்கராஜ் முனைவர் த. சுந்தரராஜ்
திரு.மு. சதீஸ்குமார்

வெளியீடு:
**தமிழ்த்துறை**

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்செங்கோடு–637215.
தமிழ்நாடு, இந்தியா.
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu



© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.*


### தலையங்கம்

## இளமையின் வலிமை

ஒரு நாட்டின் எதிர்காலமே, இளைஞர்கள் கையில் தான் உள்ளது. இளைஞர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப தான், நாட்டின் வளர்ச்சியும் அமைகிறது. இத்தகைய வலிமைபடைத்த இளைஞர் களை, ஒவ்வொரு அரசும் ஆக்கப்பூர்வ பணிகளில் ஈடுபடுத்த வலியுறுத்தும் விதமாக, ஆகஸ்ட் 12-ம் தேதி சர்வதேச இளைஞர்கள் தினம் கொண்டாடப் படுகிறது.ஐ.நா., சபையால் 1999ல் இத்தினம் தொடங்கப்பட்டது.

ஐ.நா., அறிக்கையின்படி, 15 வயது முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்கள், உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கு உள்ளனர்.இதில் பெரும்பாலானோர் வளரும் நாடுகளில் உள்ளனர். கல்வி, வேலைவாய்ப்பு, அரசியலில் பங்கு போன்றவற்றை இளைஞர்களுக்கு ஒவ்வொரு அரசும் சரியான விதத்தில் ஏற்படுத்தி தரவேண்டும். குடும்பத்தை முன்னேற்ற வேண்டியது, இவர்கள் கையில் உள்ளது.

“இளைஞர்கள் 100 பேரை என்னிடம் கொடுங்கள்; இந்திய நாட்டையே நல்ல நாடாக மாற்றிக் காட்டுகிறேன்" என்று விவேகானந்தர் கூறியது இளைஞர் வலிமைக்கு ஓர் உதாரணம். உத்வேகம், அர்ப்பணிப்பு, நாட்டுப்பற்று மிக்க இளைஞர்களை வழிநடத்திச் செல்லக் கூடிய இளமை, துடிப்பு, சுயநலமில்லாது பாடுபடும் அர்ப்பணிப்பு, ஞானம் மிகுந்த விவேகானந்தரைப் போல் ஒரு வழிகாட்டியைக் கண்டுகொள்வதுதான் இன்றையச் சூழலின் தேவையாகிறது. இன்று உலகின் எல்லா நாடுகளிலும்

இளைஞர்கள் தம் திறமையை வெளிப்படுத்தி அந்த நாடுகளின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக உள்ளனர். கடும் குளிர், மிகுந்த வெப்பம் என எந்தவிதமான நிலையிலும் பணிபுரியும் தகுதியுள்ளவர்கள். உடல் ஆற்றலுடன் அறிவாற்றலிலும் சிறந்து விளங்குபவர்கள் நம் நாட்டு இளைஞர்கள்.



உலகின் பல முன்னோடி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளைத் தம் தகுதியால் அலங்கரித்து வருகிறார்கள்.

இவ்விடத்தில் இரு கருத்துக்கள் நினைவுக்கு வருகின்றன. ஒன்று, கிரேக்கத்தத்துவ ஞானியான சாக்ரடீஸின் வரலாற்றுடன் இணைந்த ஒரு சம்பவம். ஓர் இளைஞன் சாக்ரடீஸிடம் வந்து வெற்றிக்கான இரகசியத்தைப் பற்றிக் கேட்டான். அதற்கு சாக்ரடீஸ் மறுநாள் காலை ஆற்றங்கரைக்கு வருமாறு கூறினார். மறுநாள் காலை ஆற்றங்கரையில் இருவரும் சந்தித்தனர்.சாக்ரடீஸ் அந்த இளைஞனை ஆற்றை நோக்கி உள்ளே வரும்படி அழைத்தார். கழுத்தளவு நீர் வரை உள்ளே வந்தவுடன் அந்த இளைஞனை நீரினுள் வைத்து அமுக்கினார். அவன் வெளியே வர முயற்சி செய்தான். ஆனாலும் அவனை அப்படியே அமுக்கியவாறு அவனது முகம் நீல நிறமாக மாறும் வரை வைத்திருந்தார். சற்றுப் பொறுத்து அவனது தலையை நீரினுள்ளிருந்து வெளியே இழுத்தவுடன் அந்த இளைஞன் செய்த முதல் வேலை, தன்னால் இயன்ற அளவு காற்றை மீண்டும் மீண்டும் உள்ளிழுத்ததுதான். சாக்ரடீஸ் அவனிடம் “நீ நீருக்குள் இருந்த போது நீ எதை அதிகம் விரும்பினாய்?” என்று கேட்டார். அந்த இளைஞன் “காற்று” என்று பதிலளித்தான். சாக்ரடீஸ், “வெற்றியின் இரகசியமே அது தான். நீ எவ்வளவு அதிகமாக காற்றை

*விரும்பினாயோ அது போன்றே வெற்றியையும் விரும்பினால் உனக்கு அது கிட்டும்" என்று சொன்னார். இதைத் தவிர வேறு எந்த இரகசியமும் இல்லை. இளைஞர்களின் உணர்வுக்கு இது ஓர் உதாரணம். மற்றொன்று, விவேகானந்தரின் சிந்தனை. ஒவ்வொரு இளைஞனும் தன்னம்பிக்கையுடன் தனது பணியினை முன்னெடுக்கக் கடமைப்பட்டுள்ளான். இன்றைய இளைஞர்கள் ஒருவரைப் பின்பற்றும்போது முழுக்க முழுக்க அவராகவே மாறிவிடக்கூடாது. மாறாக, நல்ல குணங்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை விவேகானந்தர் அழகாகக் கூறுகிறார். "ஒரு விதையை நிலத்தில் போடுகிறோம். அதன் வளர்ச்சிக்குத் தேவையான எரு, தண்ணீர் ஆகியவற்றை அளிக்கிறோம். அவ்விதை எருவாகவோ, தண்ணீராகவோ மாறாமல் தன் இயல்பிலேயே எடுத்துக் கொண்டு பிரம்மாண்ட மரமாகிறதே" அது போல.*

# உள்ளடக்கம்


- **கவிதை**.......................................04-12
- **சிறுகதை**....................................12-18
- **கட்டுரை**......................................18-24
- **பொது அறிவு**..........................24-32

# கவிதைகள்

## நட்பு

தோள் கொடுக்க தோழனும்
தோள் சாய தோழனும்
கிடைத்தால் அவர்கள் கூட
தாய் தந்தைதான்.

**வி.சோமசுந்தரம்**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## கல்லூரி

நண்பன் கடவுள் தந்த பரிசு
அம்மா கடவுளாக வந்த பரிசு
கல்லூரி கடவுளுக்கே
கிடைக்காத பரிசு.

**ய.ச.ஜீவிதா**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு-அ பிரிவு

## நினைவுகள்

நினைவுகள் என்பது
கடல் அலை போல
நெருங்கி வரும் போது
விலக தோன்றும்
தொலைவில் உள்ள போது
ரசிக்க தோன்றும்.

**எம்.தனசேகர்**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## தாய்

நான் பிறப்பதற்கு
நீ பிறந்தாய்
உன் திருவடி வணங்க
யான் சமர்ப்பணம்
பத்து மாதம் சுமந்து
பெற்றெடுத்தாயே!
உன்னை அடுத்த யுகம்
என் குழந்தையாக
வர வேண்டுகிறேன்
நண்பன் என்பது
இனிப்பு போன்றது
சாப்பிட சாப்பிட
சுவை உண்டாக்கும் - ஆனால்
உடல் நலத்திற்கு
தீங்காய் அமையும்
தாய் என்பது
பாவக்காய் போன்றது
சாப்பிட்டால் கசப்பு
சுவையைத் தரும் - ஆனால்
வயிற்றில் உள்ள
புழுப்பூச்சியெல்லாம்
அழித்து விடும்...

**வெ.மணிபாரதி**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## மாற்றம் ஒன்று தான் மாறாதது

துன்பம் சிறிது நேரம் என்று
தெரிந்த உனக்கு
இன்பமும் சிறிது நேரம் என்று
ஏன் தெரியவில்லை
மாறு...
மாறுவதெல்லாம் மண்ணோடு
மனிதா!
எல்லா கொஞ்சகாலம்.

**பா.வருண்பிரசாத்**

இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## நட்பு

காதல் என்பது
சூரியனும் நிலவும் போல
எப்போதும் ஒன்னா
வராது – ஆனால்
நட்பு என்பது
நிலாவும் நட்சத்திரம் போல
எப்போதுமே
ஒன்னாதான் இருக்கும்
இதுதான் எங்கள் நட்பு!

**த.பரத்குமார்**

இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## குழந்தையாக இருந்திருந்தால்...



பொய் சொல்ல வேண்டியதில்லை
எதிர்பார்த்து ஏமாற வேண்டியதில்லை
வெட்டிக்கதைகள்
பேச வேண்டியதில்லை!
கவலையால் தூக்கம்
கெட வேண்டியதில்லை!
ஊருக்கு உபதேசம்
செய்ய வேண்டியதில்லை
முகத்திற்கு முன்
சிரித்து பேசி
முகத்திற்கு பின்
குறைத்து
பேச வேண்டியதில்லை!

**எஸ்.கே.சுகன்ராஜ்**

இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## மனுஷங்க...?!



காடுகளில் வாழ்ந்தவர்கள் நாங்கள்
ஆனால் அதற்கும் எங்களுக்குமான
மானசீக உறவை
எப்பொழுதோ
அறுத்தெரிந்துவிட்டோம்

குன்றுகளில்
குடிசையிட்டுக் குடியிருந்தோம்
ஆனால் எங்களைச் சுமந்த
அதன் அன்பை
அற்பமாய் நினைத்து
அதன் சுவடே இல்லாமல்
வெடி வைத்து அழித்தோம்.

கழனிகள் சூழ்ந்த கரைகளில் தான்
நாடோடியாகத் திரிந்த
எங்கள் வாழ்வு நிலைபெற்றது.
நிலையான வாழ்வையும்
நிம்மதியையும் அளித்த
கழனிகளைத் தான்
இன்று
பிளாட்டுகளாக்கியிருக்கிறோம்.

நீர்நிலைகளின்
இக்கரையிலும் அக்கரையிலும்
தொடங்கியது எங்கள் நாகரிகம்.
நாகரிகமடைந்த நாங்கள்
அந்த நீர்நிலைகளை விழுங்கிவிட்டு
நீலிக்கண்ணீருடன் இரங்கல்கடிதமும்
எழுதிக்கொண்டிருக்கிறோம்.

பூமியின் புனிதங்கள் அனைத்தையும்
கறைபடுத்திவிட்டு
இதோ புறப்பட்டுவிட்டோம்
செவ்வாயையும்
நிலவையும் நோக்கி...

**த. சுந்தரராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

## வாழ்க்கை

ரோஜா செடியில்
முள்ளும் இருக்கும்
மலரும் இருக்கும்
முள்ளைக் கண்டு பயந்து விடாதே!
மலரைக்கண்டு மயங்கி விடாதே!

**சி.மனோஜ்குமார்**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## உதவி

தேய்பிறை போல் தேயாமல்
வளர்பிறையாக
வளர்ந்து உதவுவேன்..

**எம்.பிரேமா**
தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## அன்பே! அன்பே!

நான் தனிமையில் இருந்தால்
மல்லிகைப்பூவும் மணக்கவில்லை
இனியவளே!
நீ என் அருகில் இருந்தால்
காகிதப் பூவும் மணக்கும்.

**சே.பிரீத்தி**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## நண்பனின் பெயர்

நண்பா உன் பெயரை
எழுத தயங்குகிறேன்
ஏனென்றால்
கூர்மையான பேனா முனை
உன்னைக் குத்திவிடுமோ என்று!!!

**சி.சிபிச்செல்வன்**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## மனித இயல்பு

தனிமையில் இருந்தேன்
என் தவறை உணர்ந்தேன்
நல்லதை மொய்ப்பிக்க
முயன்றேன்
என் மனம்
சில நிமிடங்களில்
மறந்துவிட்டேனே
அந்த நல்ல மாற்றத்தை!!

**சே.கௌரிசங்கர்**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## வெற்றிப்பாதை

உன் தோல்விக்கான
காரணத்தை தேடாதே
உன் வெற்றிக்கான
பாதையை தேடு
உனக்கு
தோல்வியே கிடைத்தாலும் கூட
தோல்வியே வாழ்க்கை இல்லை
என்ற எண்ணம்
உன் இதயத்தில் இருந்தாலே
வெற்றி உன் அருகில் உள்ளது
என்று அர்த்தம்...

**மு.ஜனப்பிரியா**
இளங்கலை இரண்டாமாண்டு நுண்ணுயிரியல்துறை

## மனிதநேயம் மலரட்டும்

வளர்ந்து வரும் அறிவியல்
உலகத்திலும் கூட
*எண்ணற்ற உயிர்களின் உணர்வுகள்*
*இன்னும் சில மனிதனுக்குள்ளே...!*
*பிரதிபலித்துக் கொண்டு தான்*

இருக்கின்றன.
வறண்ட பூமிக்காக
வானம் தன் கண்ணீரை
தண்ணீராக மாற்றும்
இது கூட நேயம் தான்
வறண்ட பூமிக்காக
வானம் செய்யும் நேயம்.
ஏழை விவசாயியின்
மண்ணைப் பொன்னாக்க
தன் உடலுழைப்பு அருளும்
மண்புழுவிடம் கூட நேயம் இருக்கிறது
ஏழை விவசாயியின் வியர்வைக்காக...
பால்வாடை அடிக்கும் மழலையிடம்
கூட உண்டு நேசம்
இனம்புரியா உணர்வோடு
அனைவரையும் அணுகும்...
சாலையின் ஓரம் செல்லும் போது
பூக்களின் குரல்
மனிதா...!
நீ என்னை ரசிக்கமட்டும் தான்
செய்கிறாய்
வானிடமும், தென்றலிடமும் இருக்கும்
அன்பும் நேயமும்
உன்னிடம் இல்லை.
மனிதா...!
ஐந்தறிவு படைத்த
உயிர்களிடத்தில் இருக்கும்
நேயம் கூட
ஆறறிவு படைத்த
உன்னிடம் இல்லையே.

**தமிழரசன்,**
இளங்கலை மூன்றாமாண்டு மின்னனுவியல்

## தாய்மையின் வலி

தாய்மையின் வலி
என்னவென்று எனக்கும்
தெரியும் - அதனால்தான்
அன்று அம்மாவுடன் - சேர்ந்து
நானும் அழுதேன்
நான் பிறக்கையில்..!

**எஸ்.சுரேஸ்**
வணிகவியல் முதலாமாண்டு

## அவமானம்

வருடத்தில் இருநாள்
தேசியக்கொடி வணங்க
நேரமில்லை
வருடம் முழுவதும் கட்சி கொடி
வணங்கா ஆளில்லை

**மு.பொற்கொடி,**
இரண்டாமாண்டு உயிரிதொழில்நுட்பவியல்-ஆ-பிரிவு

## அம்மா

ஒவ்வொரு நாளும் தவம் கிடக்கிறேன்
நீருக்கு ஏங்கும் நிலம் போல
அம்மாவின் முகம் காண...

## காதல்

உன் காதருகில்
கன்னத்தைத் தழுவும் கூந்தலாக
நான் இருக்க ஏங்குதடி மனம்...!

## நட்பு

இப்பூமியில்
உனக்கு முன் பிறந்த எனக்கு
நீ பிறந்த பின்பே கிடைத்தது
நட்பென்னும் வரம்...!

**த. இளமதி,**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டுஆ-பிரிவு

## குழந்தை சொன்ன பதில்

தவமாய் தவமிருந்து
ஈன்றனர் குழந்தையை
தாயும் தந்தையும்.
பாட்டியும் பாட்டனும் கேட்டனர்
குழந்தையிடம்,
உனக்குப்பிடித்தது
அப்பாவா? அம்மாவா?
குழந்தை சொன்னது
எனக்குப்பிடித்தது இவர்கள் அல்ல,
கணினியும் கைப்பேசியுமே...!

**பா.பிரியதர்ஷினி,**
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு.

## பரிசுகள் 100 சதவிதம் உத்திரவாதம்

சிகரெட் புகையுங்கள்
மது அருந்துங்கள்
பான் மசாலா
சாப்பிடுங்கள்
பரிசுகளை வெல்லுங்கள்
முதல் பரிசு – மரணம்
இரண்டாம் பரிசு – புற்று நோய்
மூன்றாம்பரிசு – காசநோய்,பக்கவாதம்
நான்காம் பரிசு – பண நஷ்டம்
பரிசளிப்பவர் – எமதர்ம ராஜா

**எஸ்.கே.சுகன்ராஜ்**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ-பிரிவு

## நட்பு

காதலுக்காக
உயிரை விட்டால்
உன் காதலி மட்டும்
கண்ணீர் விடுவாள் - ஆனால்
நட்புக்காக உயிரை விட்டால்
கல்லறையும் கூட
கண்ணீர் விடும்!!

**செ.பிரபாகரன்**
இளங்கலை இயற்பியல் முதலாமாண்டு அ பிரிவு

## வாழ்க்கை

ஓவியம் என்பது வரைபர்களின்

கற்பனைகளாக இருந்தாலும்
கனவுகள் என்பது கனவுகளாக
இருந்தாலும் வாழ்வு
என்பது வெற்றியின் கனவுகள்
முயன்றால் நிச்சயம்
நினைவுகளாகும்

ர. சாந்தினி
I B.COM (CA)- B

## அப்துல் கலாம்

ராமேஸ்வரத்திலோ,
கடலுண்டு, காட்சி உண்டு
கடவுளர் சிலைகளுமுண்டு – அதில்
ஏ.பி.ஜே சமாதியும் உண்டு – இங்கு
மீனவர்கள் உண்டு
இரண்டாம் இராமனாய்
இருளைக் கிழித்தவர்
இத்தரணியில் உண்டு
அவரே
அனைவரும் போற்றும் அப்துல்கலாம்.
அக்கினிச் சிறகுகளாக விரித்து
ஆகாயத்தில் பறந்தாய்
ஆடவனை ஆள
ஏவுகனை செய்தாய்
எதுவும் முடியுமென நினைத்தாய்
ஏவுகனைகள் விடுத்தாய் – நீ
எழுதுகோல் தாங்கி
எழுதி வைத்த வாசகங்கள்
விழுது போல் வளர்ந்து
விண்ணுயர்ந்தன.
அதிலொன்று கனவு காணுங்கள் அது
தூக்கம் தரும் கனவல்ல
தூங்கவிடாமல்செய்யும் கனவென்றாய்
புதிரெவன் போட்டாலும்
கதிரவனாய் விடை கொடுத்தாய்
நல்ல குடியாட்சி செய்தாய் – அதில்
அணு ஆராய்ச்சியும் செய்தாய்
உன் நடையே இராணுவ அணிவகுப்பு
உன் மறைவுக்குத் தேவையா
இராணுவ அணிவகுப்பு?
2020 இல் இந்தியா வல்லரசு என்றாய்
அதைக் காணாமலே பிரிந்தாயே…
இருந்துமேஇறந்து வாழ்பவர் மத்தியில்
இறந்துமே புகழுடன் வாழ்கிறாய்
வேறென்ன வேண்டும்
நாட்டின் பெருமைக்கு
நாங்களும் முடிவெடுத்தோம்
ஆகலாம் கலாம் என்று…

F. சுலைமான்
இளங்கலை தமிழ் இரண்டாம் ஆண்டு

## தமிழே! தாயே!

உந்தன் பால்
பற்றுக் கொண்டு
உன் பால் உட்கொண்டு
உன்னை வணங்கி
வாழ்த்த வந்த வாழை நான்!
துள்ளி ஓடுகிறாய்
வள்ளுவன் வாக்கில்

துள்ளல் ஓசையோடு
துடுப்பு மீசையோடு
வந்தான் பாரதி!

நீ ஆக்கிக் கொண்டாய் சாரதி!
அவனுக்கொரு தாசன்




உருவானான் பாரதிதாசன்!
தமிழே தாயே
உன்னை அமுதென்று
அர்ச்சிக்க மாட்டேன் அம்மா
ஏன் என்கிறாயா
அமுதமும் அளவிற்கு மீறினால்
ஆகிவிடுமாம் நஞ்சு!
பவித்திரமானவளே
பரவசம் அளிப்பவளே!
தலையில் சூளாமணியும்
வார்த்தையில் சிந்தாமணியும்
அணிந்த வசந்தாமணியே!
கருமை கூந்தலுக்கு


குண்டலகேசி அணிந்த
கலையரசியே!
காலில் சிலப்பதிகாரமும்
இடையில் மணிமேகலையும்
அணிந்தவளே!
உன்னை
வாழ்த்துவதே ஒரு கலை!
இன்றைய அரசு
கட்டாயமாக்குகிறது
ஆங்கிலத்தை.
நீ
வென்றுவிட்டாய் அதை!
எத்தனை கவிஞர்கள்!

நீல(ள) கேசியே!
காதணியாய்க்
உன் மடி மீது தவழ ஆசை!
பழமை படுத்திய உனக்குப்
புதுமைப் பாட்டுப்
புனைகிறேன் அம்மா
புதுக்கவிதையாய்
தேடினேன் வர்ணிக்க
வார்த்தைகளைத் தேடினேன்
வர்ணிக்க
வாய்ப்புத் தரவில்லை வார்த்தைகள்!
என்னை என் அன்னை சுமந்தாள்
பத்து மாதம்
தமிழன்னை சுமந்தாள்
பத்து வருடம்
அம்மா உன் குழந்தைகளில்
ஒருத்தியாய்
நானிலம் வணங்கும்
நாயகி உன்னை
அலங்கரிக்க
நான் விரும்பி
நாளும் முயல்கிறேன்
புது அணிகலன் புனைய!
ஆசீர்வதித்து அனுப்பம்மா!
ஆசையால்
உள்ளம் குதிக்குதம்மா!

இரா. ஹரி ரிதன்யா
முதலாம் ஆண்டு உயிர்வேதியியல்

# சிறுகதை

## சுதந்திரத்தின் சுகம்



**ஒரு நாள் ஒட்டகம் தன் எஜமான் பூட்டியிருந்த** விலங்கை அறுத்துக்கொண்டு நேராக மேற்கு நோக்கி ஓடியது. வழியில் பெரிய ஆறு ஒன்று குறுக்கிட்டது. அதைக்கடப்பதற்கு வழி தெரியாமல் விழித்தது ஒட்டகம். முன்னால் ஆழமான ஆறும் பின்னால் உயரமான கரையும் இருந்தது. இருபக்கமும் கண்ணுக்கெட்டும் தூரம் வரை பசுமையே இல்லை. என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறி நின்றது அப்பாவி ஒட்டகம். களைப்பாயிருந்தது.பசி வயிறை பிடுங்கியதால் சத்தம் போடக்கூட முடியவில்லை. அங்கு நீரை தவிர வேறெதுவுமில்லை. அப்படியே தரையில்

அமர்ந்தது. அப்படியே இரண்டு நாட்கள் கடந்தன. உடல் நடுங்கியது. ஒட்டகத்தின் நிலையைப் பார்த்து காகம் இறங்கியது. ஒட்டகத்தின் அருகில் வந்த காகம் அதன் மீது இரக்கம் கொண்டு அதைப்பார்த்துக் கேட்டது. "நான் மேலே பறக்கிறேன் நீ என்னைத் தொடர்ந்து நான் போகும் இடத்திற்கு வா" என்றது. அப்படியே ஒட்டகமும் சரியென்று காகம் காட்டிய வழியில் சென்றது. அங்கே பசுமையான வயல்வெளிகள் பரவிக்கிடப்பதைக் கண்டு ஒட்டகம் மகிழ்ச்சி அடைந்தது. காகத்திற்கு நன்றி கூறியது. அதோடு காகத்தைப் பார்த்து ஒட்டகம் கேட்டது, நண்பா, இங்கு மனிதர்கள் வருவார்களா? காகம் சிரித்ததுக் கொண்டே கேட்டது, பசுமையான வயல்வெளி மனிதன் இல்லாமல் உருவாகுமா?. ஒட்டகத்தின் முகம் சிவந்தது.

**ஜெ. தயா பிங்கி.**

## ஒற்றுமையே பலம்



**ஒரு ஊரில் ஒரு பெரிய பெருமாள்** கோவில் இருந்தது. அங்கு புறாக்கள் நிறைய இருந்தன. அந்தக் கோவிலில் திருவிழா ஒன்று நடந்தது. அதற்காக கோவிலை சுத்தப்படுத்தும் பணி தொடங்கியது. இதனைக்கண்ட புறாக்கள் அனைத்தும் அருகில் உள்ள இயேசு கோவிலுக்கு இடம்பெயர்ந்தன. அங்கு சென்ற சிறிது காலத்திலேயே கிறிஸ்தவர்களின் பண்டிகையான கிறிஸ்துமஸ் வந்துவிட்டது.உடனே அவர்களும் இயேசு கோவிலை சுத்தப்படுத்தி அலங்கரிக்கத் தொடங்கினார்கள். அதனால் அங்கிருந்த புறாக்கள் அதற்கு சற்றுத்தொலைவில் உள்ள மசூதிக்கு இடம்பெயர்ந்தன. அங்கு சிறிது காலம் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தன. அப்போது இஸ்லாமியர்களின் பண்டிகையான ரம்ஜான் நெருங்கியது. அதனால் மசூதியை அழகுபடுத்தும் வேலை தொடங்கியது. புறாக்கள் யோசித்தன. நாம் தஞ்சம் அடையும் இடங்களில் எல்லாம் சிறிது காலம் கூட நிம்மதியாக இருக்க முடியவில்லையே... சரி மீண்டும் பெருமாள் கோவிலுக்கே இடம் பெயர்வோம்.

அங்கு கோவிலை இனி அடுத்த வருஷம் தான் சுத்தப் படுத்துவார்கள் என முடிவு செய்து புறாக்கூட்டங்கள் பெருமாள் கோவில் நோக்கிப் பறந்தன. அப்போது பெருமாள் கோவில் அருகில் ஒரே பேரிரைச்சல், மனிதக்கூச்சல்கள் காதைக் கிழித்தன. அந்த கூச்சல்களைக் கண்டு பெருமாள் கோவிலின் கோபுர இடுக்குகளில் புறாக்கள் அமைதியாக அமர்ந்து கீழே நடப்பவற்றைக் கவனித்தன. கீழே இந்துக்களும், இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் தன் கடவுள் தான் உண்மையான கடவுள் என்றும் நாங்கள் தான் விழாவை பெரிதாகக் கொண்டாடுவோம் என்று ஒருவரையொருவர் ஏசிக்கொண்டு கலவரத்தில் இறங்கினர். ஒரே சலசலப்பு, அடிதடி ஊரே கலவர பூமியாக காட்சியளித்தது. இந்துக்கள் வாழ்க... இஸ்லாமியர்கள் வாழ்க... கிறிஸ்தவர்கள் வாழ்க... என்று ஒரே கோஷம் வேறு.

பெருமாள் கோவில் கோபுரத்தில் அமைதியாக அமர்ந்திருந்த புறாக்களில் ஒரு புறா, மற்றொரு புறாவைப்பார்த்துக் கேட்டது. "நாம் பெருமாள் கோவிலில் வசித்தாலும், மசூதியில் வசித்தாலும், இயேசு ஆலயத்தில் வசித்தாலும் எப்பவும் போல ஒரே மாதிரித்தான் இருக்கிறோம், ஒற்றுமையாகத்தான் இருக்கின்றோம். நம்மியெல்லாம் புறா என்றே அழைக்கும் அந்த மனிதர்கள் மட்டும் ஏன் தன்னை மனிதன் என்று கருதாமல், இந்து என்றும், இஸ்லாமியர் என்றும், கிறிஸ்தவர் என்று கோஷமிட்டு சண்டை யிடுகிறார்கள்". அதற்கு இன்னொரு புறா பதில் சொன்னது, "அதனால் தான் நாம் மேலே இருக்கிறோம், மனிதர்கள் கீழே இருக்கிறார்கள்".

**ச. தமிழன்.**

## பேராசை பெருநஷ்டம்

**ஒரு ஊரில் ஆலமரம் ஒன்று இருந்தது அதன் கனிகள் சிறியவை** அதன் பின் அதில் உள்ள விழுதுகள் நீண்ட தடிமண் போல் இருக்கும் அதில் குழந்தைகள் விளையாடி மகிழ்வர். அதன் பின் அங்கு பல மக்கள் மரத்திற்கு அடியில் அமர்ந்திருப்பார்கள் எனினும் அந்த மரத்திற்கு ஒரு சிறு வெறுப்பு என்னவென்றால் அளவு பெரியது ஆனால் அதில் உள்ள கனிகள் மிகவும் சிறியது அதை நினைத்து வருந்திக் கொண்டிருந்தது. ஒரு நாள் ஒரு

பேரொலி வானில் கேட்டது. அது அசரியை ஒளி ஒளித்தது மரமே உனக்கு என்ன வேண்டுமென்று கேள் நான் தருகின்றேன் என்றது அதற்கு அந்த மரம் எனக்கு என் உருவம் பெரிதாக உள்ளது ஆனால் என் கனிகள் சிறிதாக உள்ளது என்று கூற அந்த அசரிகை அந்த வரத்தை அளித்தது. இதில் உள்ள கனிகள் எல்லாம் பெரிதாக மாறிவிட்டது. ஒரு நாள் அங்கு அமர்ந்து இருந்த ஒருவர் மேல் ஒரு பழுத்த பழம் விழுந்தது. அப்போது அந்த ஊரில் மக்கள் எல்லாம் அந்த மரத்தை வெட்ட வேண்டும் என்று கூறினார்கள். பிறகு அம்மரம் அசரியை கூப்பிட்டது அந்த அசரியே வந்தது.

**ரா.பிரதாப்**

இளங்கலைத் தமிழ் இலக்கியம் மூன்றாமாண்டு


## இது ஒரு விதமான நட்பு

*ஓர் அழகிய கிராமம், எழில்சார்ந்த விதமாக அவ்வூர் அமைந்திருந்த்து. அதன் இப்பொழுது உள்ள கிராமங்கள் போல் அல்லாமல் இருபது முப்பது வருடங்களுக்கு முன்பு கிராமம் எவ்வாறு இயற்கையின் பெயர் சொல்லும் வகையில் இருக்குமோ அவ்வாறு இருந்த்து. அக்கிராமத்தின் பெயர் அனுலாந்தபுரம். அக்கிராமத்தில் வாழும் மக்கள் ஒன்றோடு ஒன்றாக இணைந்திருந்தனர். அனுலாதேவி எனும் பெண்ணும், தமிழிசை எனும் பெண்ணும் ஒரே வயது உடையவர்கள், ஆகையால் அவர்கள் இருவரும் நல்ல தோழிகளாக இருந்தனர். எந்த வேளையை செய்தாலும் ஒன்றாக இணைந்தே செய்வர். அவர்களது குடும்பத்திலும் ஒரு நல்லுரவை வளர்த்து கொண்டனர். இருவருக்கும் இடையில் ஒரே விஷயம் மட்டும் அல்ல பலவிஷயங்கள் ஒரு மாதிரியாக இருந்த்து. அவர்ர்களது பிரிவுக்கு காரணமாக இருந்த்து. அவர்கள் இருவருக்கும் இடையில் நல்ல புரிதல் அதுவே சில மனச்சங்கடங்களை உருவாக்கியது. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லை ஆனால் பேசாமலும், பழகாமலும் இருக்கவும் முடியவில்லை அதனால் அவர்களது நட்புக்குள் இடைவெளி அதிகமானது இருவரும் தினந்தோறும் பார்த்துக் கொள்கின்றனர் ஆனால் முதலில் யார் பேசுவது*

என்று தயக்கம் இதுவே அவரக்ளது வாடிக்கையாக போனதால் அவர்களது குடும்பம் இடையில் வரவில்லை. ஆனால் யாராவது ஒருவர் பேசிவிடுவர் ரொம்ப நெருக்கமாக இருப்பார்கள் மறுபடியும் ஒரு சின்ன மனச்தாபம் ஏதேனும் சின்ன விஷயமாயினும் பகிர்ந்து கொள்வர். அவர்கலது நட்பு ஒரு விதமான காதல் என்று கூட கூறலாம். அவர்களை விட நெருக்கமாக வேரு ஒருவரும் பேசினால் கோபம் வரும் அவர்களது அன்பே அவர்களுக்கு எதிரி அதீத அன்பும் ஆபத்தானது மற்றும் விட்டுக்கொடுக்கும் குணம் அனைவரிடமும் வேண்டும் எதிலும் ஒரு எல்லை உண்டு.

தி.செ.திவ்யா.

## The Dove and the Crow




Once there was a dove, He lived in a wooden hut in a kind women's house. Every morning, the dove would fly out to meet friends. In the evening he would return to his cozy hut. The woman loved the Dove very much. She gave nuts and beans to eat. The dove was too very gentle. He would never steal food from women's kitchen. A greedy crow, living nearby, wanted to enter woman's kitchen. One day, Crow came to the dove and asked sweetly, "Will you be my friend, O dear dove? I am all alone in this world. The kind hearted dove allowed the crow to live with him in his hut. Crow's mouth began to water as 'he thought, "Now I can enjoy the

delicious food that the woman cooks. let me see what is there for today!' Just as he removed the lid of the bowl it fell down. "blank!' came the sound. Hearing the sound, the woman rushed in and hit the crow with thick stick. The crow was rightly punished for being greedy and wicked.

Moral: Greedy will cause big problems. So, don't to be greedy of others.

**D.Swathi**, II BA English.

## Tell me!



A voyaging shop was wrecked during a storm at sea and only of the men on it were able to swim to a small, desert like island. The two survivors who have been a good friends, not knowing what else to do, agreed that they had no other recourse but to pray to god. However, to find out whose prayer was more powerful, they agreed to divide on opposite sides of the island. The first thing they prayed for was food. The next morning, the first man saw a fruit bearing tree on his side of the land, and he was able to eat the fruit. The other man's parcel of land remained barren. After a weak the first man prayed for a wife. The next day, another ship was wrecked, and the only survivor was a women who swam to his side of the land. On the other side of the island there was nothing. Soon the first man prayed for a house, clothes, food. The next day like magic, all of these were given to him. However the second man still had nothing. Finally, the first man prayed for a ship so that he and

his wife could leave the island. In the morning, he found a ship docked at his side of the island. The first man boarded the ship and with Phyfe he decided to leave the second man on the island. He considerable the other man unworthy to receive. God's blessings since none of his prayers had been answered. As the ship was to leave the first man heard a voice from heaven booming. Why are you leaving your companion on the island? My blessings are mine alone. Since I was the one who prayed for them. The first man answered "his prayers were all unanswered you are mistaken the voice rebuked him. "He had only one prayer which I answered. If not for that you would not have received any my blessings". "Tell me! The first man asked the voice "what did he pray for that I would owe him anything?" "He prayed that all your prayers to be answered' value your friends don't leave your loved ones behind.

**R. Gokulapriya**, II BA English.

# கட்டுரை

## இரத்தப் பணம்

**கறுப்புப்பணம், வெள்ளைப்பணம் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால்** இரத்தப்பணம் என்றொரு சொல் கேங்ஸ்டார்கள் மொழியில் இருக்கிறது. இரத்தப்பணத்திற்கு அங்கு இடத்திற்கேற்ப சில மாற்றுப்பெயர்களும் உண்டு.

அவை: தியா,கிலாஸ்,எரிக்பைன்,காலனாஸ்.

ஒருவரை கொலை செய்வதற்காக அளிக்கப்பெறும் பணம் தான் இரத்தப்பணம். இரத்ததிற்கு ஈடாக அளிக்கப்படும் பணம்.



இயேசுநாதரை காட்டிக்கொடுத்து 30 வெள்ளிக்காசுகளைப் பெற்றான் யூதாஸ்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்னர் அவன் தன் தவறை உணர்ந்து குற்ற உணர்வு தாளாமல் வாங்கிய காசுகளை திருப்பிக்கொடுத்தான். அப்போது அங்கிருந்த ஆட்சியாளர்கள் அந்த பணத்தை மீண்டும் கஜானாவில் சேர்க்க முடியாது, இது இரத்ததிற்குக் கிடைத்த விலை என்று சொன்னார்கள். அங்கிருந்து தான் இரத்தப்பணம் (பிளட் மணி) என்ற இந்த வார்த்தை பிறந்தது.

ஆனால், தேவாலயத்திலோ, அரண்மனையிலோ ஒருவர் கொலை செய்யப்பட்டால் இந்த நஷ்ட ஈட்டு முறை எதுவும் கிடையாது. அவர்களுக்கு நேரடியாக மரணத்தண்டனை தான்.

**பு. கமலக்கண்ணன்,**
இளங்கலை இரண்டாமாண்டு தமிழ்.

## பொருள் திரியும் சொற்கள்




**“யோவ்... என்னய்யா பஸ்ஸ இப்படி உருட்டிக்கொண்டு போறீங்க?** எக்ஸ்பிரஸில் ஏறினால் சீக்கிறம் போயிறலாம்னு ஏறினேன்,

இது சாதாரண உள்ளூர் பேருந்து போலத்தான் மெதுவாகப் போகுது” என பஸ் பயணிகள் மனதிற்குள் நொந்துகொள்ளும் நிலை இன்று இயல்பாகிவிட்டது. பேருந்துகளின் முன் கண்ணாடியில் *1* டு *1*, எக்ஸ்பிரஸ், பைபாஸ் ரைட்டர், எண்ட் டு எண்ட், சூப்பர் ஃபாஸ்ட், ஃபாஸ்ட் பாஸஞ்சர், எல்.எஸ்.எஸ். என வேகத்தைக் குறிக்கும் இன்னும் ஏராளமான சொற்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்படுகின்றன. ஆனால் அவையெல்லாம் பயணக்கட்டணத்தைக் கூட்டி வசூலிப்பதற்கான உத்திகளே தவிர பொருள்

பொதிந்த சொற்கள் அல்ல. இந்த நிலை பேருந்தில் மட்டுமல்ல நம் வாழ்வின் எல்லாச்சூழலோடும் இணைந்து கிடக்கின்றது. "உயர்தர சைவ உணவகம்"னு போர்டு வச்சு ஊசிப்போன இட்லியைப் போடும் ஓட்டல்கள், நாற்றமெடுக்கும் கழிப்பறைக்கு "நவீன கட்டணக்கழிப்பறை"னு போர்டு வைத்தல் என நம் கலாச்சாரம் வணிகக் கலாச்சாரமாக மாறிக்கொண்டிருக்கிறது.

தன் மெய்பொருளிலிருந்து திரிந்து தன் தொடர்புடைய பிறிதொரு பொருள் அல்லது சொல்லுக்கு நேரெதிரான பொருள் தரும் சொற்களின் எண்ணிக்கை சமகாலத்தில் பெருகிவிட்டது என்று கூற முடியாது. ஒரு சொல்லை அதற்கு நேரெதிரான பொருளில் ஒரு சமூகம் பயன்படுத்தும் வழக்கம்(கலாச்சாரம்) நம்காலத்தில் அதிகரித்திருக்கிறது என்று வேண்டுமானால் கூறலாம்.ஏனென்றால் மொழி மனிதனின் கைப்பாவை,மனிதனின் பயன்பாட்டோடு இசைந்து நெகிழ்ந்து போகும் தன்மையை மொழி இயல்பாகவே பெற்றிருக்கிறது. மொழி ஒருக்காலமும் மனிதனின் பழக்கவழக்கத்திலும், கலாச்சாரத்திலும் தலையிடுவதில்லை, கட்டுப்படுத்துவதும் இல்லை. சொற்களின் திரிந்த பொருளை சமூகம் இயல்பாக ஏற்றுக்கொள்கின்றது. ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது, இன்னொருவர் வந்தால், அவரிடம் ஒரு நிமிஷம் வெய்ட் பண்ணுங்கன்னு சொல்வது யதார்த்தம். ஒரு நிமிஷம் வெய்ட் பண்ணுங்க என்று சொன்னவரிடம் ஒரு நிமிஷம் கழித்து, ஒரு நிமிஷம் ஆயிடுச்சு என்று யாரும் கேட்பதில்லை. அந்தக் காத்திருப்பு பல நிமிஷங்கள் வரை நீளலாம்.ஆனால் இன்று ஒரு நிமிஷம் என்னும் சொல்,சொன்னவர் திரும்ப அழைக்கும் வரையான காலத்திற்கும்(பல நிமிஷம்) பொருந்தும் சொல்லாக பொருள் திரிகின்றது.

உடனே, கொஞ்நேரம் போன்ற சொற்களும் இவ்வகைத்தே. இப்போ என்ற அப்பொழுதே,கொஞ்ச நேரம் என்ற அந்த நேரத்திலே, உடனே என்ற உடனே வினையாற்றும் போது அச்சொற்கள் தன் மெய்ப்பொருளில் இயங்குகின்றன. அவ்வாறன்றி காலம் தாழ்த்தும்போது அவை இயல்பாகவே பொருள் திரிகின்றன. ஒரு சமூகத்தின் கலாச்சாரமும், பண்பாடும் மொழியோடு இணையும் இடம் இது. பண்பாட்டின் அழுத்ததிற்கு நெகிழ்ந்து கொடுப்பதும், ஏற்றுக்கொள்வதும் மொழியின் இயல்பு. மொழியியலின் ஒரு பிரிவான சமூக மொழியியல் (Sociolinguistics) ஒரு சமூகத்திற்கும் அச்சமூகம் பேசும் மொழிக்கும் உள்ள இவ்வகை உறவுகள் பற்றி ஆராய்கிறது.

திரிபு சொல்லில் மட்டும் நிகழ்வதில்லை. மரம்+கள்= மரங்கள். ம், ங்காக திரிவது ஒலித்திரிபு. மதுரையை 'மருதை' என்று (பேச்சு வழக்கில்) அழைப்பது சொல் திரிபு. இப்ப வந்துட்டேன்னு சொல்லிட்டு எப்பவோ வருவதை பொருள் திரிபு என்று சொல்லலாமா?!

**த. சுந்தரராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

## தந்தையர் தினம்

**ஒரு குடும்பத்தில் குழந்தைகளின் நலத்தையும் ஆரோக்கியத்தையும்** பேணும் பொறுப்பு தாய்க்கு இருக்கிறது. அதே போல குழந்தைகளின் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுக்கும் பொறுப்பு தந்தைக்கு பெறுமளவு உள்ளது.

அன்புக்கு அன்னை அடையாளமாகத் திகழ்கிறாள். அதேபோல அறிவுக்கு தந்தை அடையாளமாக விளங்குகிறார். குடும்பத்திற்காகவும், குழந்தைகளுக்காகவும் மாடாய் உழைத்து ஓடாய் தேயும் தந்தையை விட அன்பை அதிகமாய் பொழியும் தாயைத்தான் பெரும்பாலான பிள்ளைகள் விரும்புகிறார்கள்.

உலகம் முழுவதும் அன்னையர் தினம் என்பது காலம் தொட்டே கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் தந்தையர் தினம் என்பது 1910-ஆம் ஆண்டில் இருந்துதான் கொண்டாடப்படுகிறது. தந்தையர் தினம் கொண்டாடக் காரணம். தந்தையர் தினம் கொண்டாடக் காரணமாக விளங்கியவர் அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த சொனாரா லூயிஸ் ஸ்மார்ட் டோட் எனும் பெண் ஆவார். அந்த பெண்ணின் தாயார் மறைவுக்குப் பிறகு அவளது தந்தை வில்லியம்ஸ் அவளுடன் பிறந்த ஆறு குழந்தைளையும் கடும் சிரமங்களுக்குப் பிறகு தாய்க்குத் தாயாக தந்தைக்கு தந்தையாக இருந்து அவரது கடமையை நிறைவேற்றினார்

அதனால் அப்பெண் அவரது தந்தையை கவுரவிக்க வேண்டும் என நினைத்தார். அதன் அடிப்படையில் அன்னையர் தினத்தைப் போலதந்தையர் தினமும் கொண்டாடப்பட வேண்டும் என பிரச்சாம் செய்தார். அவரது கோரிக்கையை அப்போதைய ஸ்போக்கேன் நகர கவர்னர் அங்கீகரித்தார்.

அதன் பின்னர் தான் தந்தையர் தினம் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் 52 நாடுகள் இத்தினத்தைக் கொண்டாட வருகின்றன.

தந்தையர் மனம்

தந்தை வெளியே கண்டிப்பையும் மறைமுகமாக பாசத்தையும் வெளிப்படுத்துபவராகத் திகழ்கிறார். அதேபோல நாமும் தந்தை பாசமுடனும் நேசமுடனும் கவனிக்க வேண்டும்

சிறு வயதில் தாய் தந்தையின் கை விரல்களைப் பிடித்த நாம் அவர்களது முதுமை வயதில் அவர்களை கை விட்டு விடாமல் நல்ல முறையில் கவனித்துக் கொள்ள வேண்டும் என தந்தையர் தினத்தில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

**பு.காவியா.**

உயிர்த் தொழில்நுட்பவியல்-முதலாமாண்டு.

## பாரதியின் வசன கவிதையில் ஞாயிறு பற்றிய அறிவியல் சிந்தனை

***மரபு வழியிலான யாப்பு அமைப்பிலிருந்து விலகி எளிய நடையில், எளிய*** *சொற்களால், எளிய பொருளில் அமைவதே வசனக்கவிதையாகும்.அனைவருக்கும் எளிதில் புரியும் வண்ணம் அமையும். தமிழில் பாரதி வசனக்கவிதையை தொடங்கி வைத்தார். ஞாயிறு பற்றிய பாரதியின் வசனக்கவிதையில் அறிவியல் கருத்து ஆழமாக இருக்கிறது. சூரியனின் இயல்புகள் பற்றி நாம் அறிவோம். அதிகப்படியான சூரியனின் வெப்பத்தால் அதனை உட்கொள்கிற உயிர்களின் உடல் சோர்வும், வருத்தமும் அடைகின்றன. அதற்குக் காரணம் நம் உடலில் உள்ள நீர், தாதுக்கள் முதலியனவற்றால் உடலில் தோன்றும் வியர்வையாகும். அப்படி வியர்வை வெளியேரும் போது உடல் இயல்பாகவே சோர்வடையும். அதற்குத்தான் மருத்துவதற்கள் நார்ச்சத்துள்ள உணவுகள், குளிர்பானங்கள் அதிகமாக அருந்த வேண்டி அறிவுறுத்துவார்கள். இங்கு பாரதி, சூரியன் தன் வெப்பத்தால் கடல் நீரை எவ்வாறு ஆவியாக்கி பின் மழையாக மாற்றுகிறது என்பதைக் குறிப்பிடுகிறார்.*

**நீ சுடுகின்றாய்**

நீ வருந்தத் தருகின்றாய்

நீ விடாய் தருகின்றாய்

சோர்வு தருகின்றாய்

பசி தருகின்றாய்

இவை இனியன

நீ கடல் நீரை வற்றடிக்கிறாய்

இனிய மழை தருகிறாய். – *பாரதி.*

**ம.நவீன்,**
இளங்கலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்.

## DRUG - AN EVIL ONE...




**It is an acceptable fact that DRUG ADDICTION is** a GREAT EVIL. There are MANY FORMS of DRUGS. CANNABIS (bhang) is used on FESTIVE OCCASIONS, particularly on holy festivals. CHILDREN get easily attracted to it. It leads them to other INTOXICANTS like CHARAS and SMACK. It has been found that FAILURES in life are the main causes of DRUG ADDICTION. It is also seen that DRUG ADDICTION is largely found in the POOR STRATA of SOCIETY. Ignorance is considered to be one of its causes. The DRUG ADDICTS increase their number by alluring their friends towards drugs. The YOUNG PEOPLE in UPPER STRATA of SOCIETY have also taken to DRUGS. This happens mostly in COLLEGE STUDENTS that depends upon their friendship. The DRUGS affect the BRAIN & damages the NERVES, thereby leading the addicted persons to SLOW DEATH. A lot of efforts are being made through MEDIA and OTHER METHODS to make people AWARE of this EVIL. Thus, I put forward for

consideration that NOT TO BE GET ADDICTED TO DRUGS when you are ANNOYED and lose your soul lavishly. CONSUMING DRUGS is NOT A WAY OF DEALING WITH A DIFFICULTY to neglect anything that is HARD TO DEAL WITH…

“STRUGGLE AGAINST

YOUR LIFE TO LIVE,

JUST LIKE THAT…! YOU DESIRE……”

**GOWSALYA. M,**
II BA English.




## பொது அறிவு

# இந்த மாதத்தின் முக்கிய தினங்கள்

- ***சர்வதேச தாய்ப்பால் தினம்*** *தாய்ப்பால் கலப்படமற்ற இயற்கை உணவு. குழந்தைக்குத் தேவையான அனைத்து சத்துகளும் தாய்ப்பாலில் உள்ளது. நோய் எதிர்ப்பு சக்தியாகவும், குழந்தையின் மரணத்தை தடுக்கவும், மேலும் குழந்தையின் மூளை நன்கு வளர்ச்சியடையவும் உதவுகிறது. தாய்ப்பால் கொடுப்பது என்பது நாளுக்குநாள் குறைந்து வருகிறது. தாய்ப்பாலைக் குழந்தைகளுக்கு அவசியம் தர வேண்டும் என்பதை வலியுறுத்தவே இத்தினம் (ஆகஸ்டு – 1) அனுசரிக்கப்படுகிறது.*
- ***உலக நண்பர்கள் தினம்*** *(World Friendship Day) அமெரிக்க காங்கிரஸ் 1935ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை உருவானது. இதனை தேசிய நட்பு தினமாக அமெரிக்காவில்*

கொண்டாடப்பட்டது. பிறகு மிகப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. நண்பர்கள் தினம் அமெரிக்காவை ஒட்டிய நாடுகளுக்குப் பரவியது. அதன்பின்னர் உலகம் முழுவதும் பரவியது. தற்போது உலகம் முழுவதும் இத்தினம் (ஆகஸ்டு முதல் ஞாயிறு) கொண்டாடப்படுகிறது.

➲**ஹிரோசிமா தினம் (Hiroshima Day)** இரண்டாம் உலக யுத்தத்தின்போது அமெரிக்கா, ஜப்பானில் உள்ள ஹிரோசிமா என்னும் நகரத்தின்மீது 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 6 அன்று லிட்டில் பாய் (Little Boy) என்ற அணுகுண்டை வீசியது. குண்டு விழுந்த சில நொடிகளில் மக்கள், கட்டிடங்கள், இரும்புகள் உள்பட அனைத்தும் ஆவியாயின. 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்தார்கள். இந்தப் கொடுமை மீண்டும் நிகழாமல் இருக்க இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲**உலக பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை தினம் (World Plastic Surgery Day)** முதலாம் உலக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வீரர் வால்டர் இயோ என்பவருக்கு முதல் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இவருக்கு 1917ஆம் ஆண்டு ஆகஸ்டு 8 அன்று சர் ஹெரால்டு கில்லீஸ் (Harold Gillies) என்கிற மருத்துவர் முகச் சிகிச்சை செய்தார். இதுவே உலகின் முதல் பிளாஸ்டிக் சர்ஜரி ஆகும். அதனால் ஹெரால்டு கில்லீஸ் என்பவரை பிளாஸ்டிக் சர்ஜரியின் தந்தை என்கின்றனர்.

➲**உலக பூனை தினம் (World Cat Day)** பூனைகள் உலகின் அனைத்து இடங்களிலும் மனிதனால் பழக்கப்பட்டு வீடுகளில் வளர்க்கப்படுகின்றன. மனிதனிடம் சுமார் 9500 ஆண்டுகளாக வாழ்கின்றன. சிறந்த இரவுப் பார்வையும், சிறந்த கேட்கும் திறனும் கொண்டவை. அதிக விளையாட்டுத்திறன் கொண்டுள்ளது. பூனையால் இனிப்புச் சுவையை உணர முடியாது. உலக பூனை தினம் முதன்முதலாக 2014ஆம் ஆண்டில் துவங்கியது.

➲**நாகசாகி தினம்** (Nagasaki Day) அமெரிக்கா 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 9 அன்று பேட் மேன் (Fat Man) என்னும் அணுகுண்டை ஜப்பானில் உள்ள நாகசாகி என்கிற நகரத்தின்மீது வீசியது. இக்குண்டு 3.5 மீட்டர் நீளமும், 1.5 மீட்டர் விட்டமும், 4500 கிலோ எடையும், 1 கிலோ புளுட்டோனியத்தையும் கொண்டது. இக்குண்டு வீசப்பட்ட சில நொடிகளில் 74000 பேர் உயிர் இழந்தனர். அணுகுண்டின் விபரீதத்தை நினைவு கூற இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

➲**சர்வதேச உலக பூர்வ குடிமக்கள் தினம்** (International Day of the World's Indigenous People) ஐ.நா. பொதுச்சபை 1994ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று ஒரு தீர்மானத்தில் ஆகஸ்டு 9 ஐ உலக பூர்வ குடிமக்கள் தினமாக அறிவித்தது. இத்தினம் 1995ஆம் ஆண்டுமுதல் கடைப்பிடிக்கப்படுகிறது. பூர்வ குடிகளின் கலாச்சாரம் பாதுகாத்தல், அரசியல், கல்வி, மொழி போன்றவற்றைக் கொடுத்தல், இவர்களுக்கு எதிராக நடக்கும் ஆக்கிரமிப்பை தடுத்தல் போன்ற விழிப்புணர்வு ஏற்படுத்த இத்தினம் கொண்டாடப்படுகிறது.

➲**சர்வதேச இளைஞர் தினம்** (International Youth Day) இளைஞர்களுக்கு இருக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவது, அவர்களை சக்தி படைத்தவர்களாக மாற்ற வேண்டும் என்கிற பார்வை 1995ஆம் ஆண்டில் ஐ.நா. சபையின் கவனத்திற்கு வந்தது. ஆகஸ்டு 12 ஐ சர்வதேச இளைஞர் தினமாக 1998ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. இளைஞர்களின் பிரச்சினையைக் கண்டறிந்து, அதனை களைந்து அவர்களின் சக்தியை நாட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.

➲**சர்வதேச இடது கைப்பழக்கம் உடையோர் தினம்** (International Left Hander's Day) உலகின் மொத்த மக்கள்தொகையில் 10 சதவீதம் பேர் இடது கைப்பழக்கம் உடையோர்களாக இருக்கின்றனர். இடது

கைப்பழக்கம் என்பது இயற்கையிலே ஒருவரின் மூளை வளர்ச்சியைப் பொறுத்து அமைகிறது. இவர்களின் சாதனைகளைப் பாராட்டும் விதத்திலும், சமூகத்தில் சிறுபான்மையாக உள்ள இவர்களுக்கு தகுந்த பொருட்களை தயாரிக்க வலியுறுத்தியும் இத்தினம் 1992ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்படுகிறது.

- **உலக மனித நேய தினம்** (World Humanitarian Day) போர், இயற்கைப் பேரழிவு, நோய், ஊட்டச்சத்து பற்றாக்குறை போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட மக்களை நினைவுகூரும் வகையில் உருவாக்கப்பட்ட உலக மனித நேய தினம் ஆகஸ்டு 19 அன்று கொண்டாடப்படுகிறது. 2008ஆம் ஆண்டு ஐ.நா. சபையினால் உருவாக்கப்பட்டது. துயரத்தால் பாதிக்கப்பட்டோருக்காக பணிபுரிவோர் மற்றும் இப்பணியில் ஈடுபடும்போது காயம் அடைந்தோர், உயிரிழந்தோர்களை நினைவுகூரும் தினமாகவும் கடைப்பிடிக்கப்படுகிறது.
- **உலக புகைப்பட தினம்** (World Photography Day) லூயிசு டாகுவேரே என்பவர் 1839ஆம் ஆண்டு டாகுரியோடைப் எனப்படும் புகைப்படத்தின் செயல்பாட்டு முறையை அறிமுகப்படுத்தினார். இதனை பிரான்ஸ் அரசு ஆகஸ்டு 19ஆம் தேதி ப்ரீடுதி வேர்ல்டு என உலகம் முழுவதும் அறிவித்தது. இதை எடுத்துரைக்கும் வகையில் உலக புகைப்பட தினம் கொண்டாடப்படுகிறது. புகைப்படத்தின் சிறப்பு, புகைப்படக் காரர்களின் திறமையை கொண்டாடும் வகையில் இத்தினம் அமைகிறது.
- **சர்வதேச அடிமை வாணிப நினைவூட்டல் தினம்** (International Day for the Remembrance of the Slave Trade and its Abolition) ஆப்பிரிக்கத் தீவில் உள்ள ஹெய்ட்டி என்ற பகுதியில் அடிமைகள் தங்கள் இழிநிலைக்கு எதிராக 1791 ஆகஸ்டு 22 நள்ளிரவுமுதல் 23 வரை போராடினர். அடிமை வாணிப முறையை ஒழிக்க முதன்முதலில் போராட்டம் நடைபெற்ற ஹெய்ட்டியில் 1998ஆம் ஆண்டு ஆகஸ்டு 23 அன்று

நினைவு விழா கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

- **சர்வதேச அணு ஆயுத சோதனை எதிர்ப்பு தினம்** (International Day Against Nuclear Test) அணு ஆயுதம் முதன்முதலாக 1945ஆம் ஆண்டில் வீசப்பட்டது. அதன் பிறகு இதுவரை 2000 அணு ஆயுத சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதனால் கதிரியக்கமும், சுற்றுச்சூழலும், நாடுகளுக்கு இடையே பதற்றத்தையும் ஏற்படுத்துகிறது. இன்றைக்குள்ள அணு ஆயுதங்களைக் கொண்டு பூமியை 500 முறை அழிக்கலாம். ஆகவே இதன் விளைவுகள்பற்றியும் அதன் பரவலைத் தடுக்க ஐ.நா. சார்பில் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.
- **உலக விளையாட்டு தினம்** (World Sports Day) உடல் வலிமையும், ஆற்றலும் மிக்கவர்களாக இளைஞர்கள் விளங்க வேண்டும் என்றால் உடற்பயிற்சியும், விளையாட்டும் அவசியம் தேவை. விட்டுக் கொடுக்கும் பண்பு, சகிப்புத்தன்மை, சிந்தனை தூண்டல் ஆகியவை விளையாட்டுக்கு உண்டு. ஆகவே குழந்தைகள், இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இத்தினம் கொண்டாடப்படுகிறது.
- **சர்வதேச காணாமற் போனோர் தினம்** (International Day of Disappeared) உலகின் பல நாடுகளிலும் காவல் துறையினராலோ அல்லது பாதுகாப்புப் படையினராலோ பல்வேறு காரணங்களால் கைது செய்யப்பட்டு காணாமல் போவோர் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் 1981ஆம் ஆண்டு இத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டது. ரகசியக் கைதுகளுக்கு எதிராக மனித உரிமை அமைப்புகள், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன போராடுகின்றன.

## சில உயிரினங்களின் அறிவியல் பெயர்கள்

அணில் – ரோன்ஷீயா ஸ்குயிரஸ்

எறும்பு – ஹைமெனாபெதரஸ்

கடல்குதிரை – ஹிப்போகேம்பஸ் சிங்நாதிடே

கழுதை – இக்கூஸ் அசினஸ்

காட்டுப்பூனை – பெலிஸ் டைகிரினா

குதிரை – இக்குலஸ் காபாலஸ்

குரங்கு – பாண்டுரே குளோடைட்ஸ்

சாரைப்பாம்பு – கோர்டாலஸ் கோரிடஸ்

சிங்கம் – பாந்தரா லியோ

சிறுத்தை – அசிநோன்க்ஸ் ஜுபாடஸ்

திமிங்கலம் – ரைனோசோடன் டைபஸ்

தேள் – அர்சினிடா ஸ்கோபியானிடா

நரி – கானிஸ் வல்பிஸ்

நல்ல பாம்பு – எலபிடே நாடா

நாய் – கானிஸ் பாமிலிரியிஸ்

பல்லி - சௌரியா லாசெரிடிடே

புலி – பான்நீதரா டைகிரிஸ்

பூனை – பெலிஸ் கேடஸ்

முதலை – குரோகோபாலியா நிலோடிகஸ்

முயல் – குயினிகுலாஸ் எலிரோடென்சியாராட்டஸ்

யானை – பிரோபோசிடே எலிபான்டே

வரிக்குதிரை – இக்குயிடே பர்சேரி

வாலில்லா குரங்கு – ஹைலோபேட்

விரியன் பாம்பு – வைபெரா பீரஸ்

வெளவால் – சிரோப்டெரா

**மா. நந்தகுமார்,**
பி.பி.ஏ. முதலாமாண்டு.

## முதல் உலக உருண்டையை உருவாக்கியவர்

போலந்தை சேர்ந்த விண்வெளி விஞ்ஞானி நிக்கோலஸ் கோபர்நிகல் என்பவர் உலகம் உருண்டை என்ற உண்மையை கண்டுபிடித்து கூறினார். இதை விளக்குவதற்காக அவர் மாதிரி உலக உருண்டையை உருவாக்கினார். ஆனால் அது விளக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு உருண்டையே. இருந்தபோதிலும் ஜெர்மனியை சேர்ந்த வரைபட வல்லுநர், மார்டின் பீகெய்ம் என்பவர் 1492 ல் உருவாக்கிய உலக உருண்டையே முதல் உலக உருண்டையாக வரலாற்றில் பதிவாகியுள்ளது. பீகெய்மின் உலக உருண்டையானது.
உலோக பந்தில் கையால் நாடுகளை வர்ணம் பூசி வரந்து உருவாக்கப்பட்டிருந்த்து. அவர் தனது உலக உருண்டைக்கு எர்டாப்பெல் என்று பெயரிட்டிருந்தார்.அதன் பொருள் ஆப்பிள் பூமி என்பதாகும். அவர் உருவாக்கிய உலக உருண்டையில்,வட அமெரிக்கா மற்றும் தென்

அமெரிக்கா கண்டங்கள் இடம் பெறவில்லை. ஏனெனில் கொலம்பஸ் தன் நெடிய கடற்பயணத்தை முடித்துக் கொண்டு 1943 ல் தான் நாடு திரும்பினார்.




ஆப்பிரிக்க கண்ட பகுதிகளும் தெளிவாக இடம் பெறவில்லை. அந்தக் காலத்தில் கிடைக்கப்பெற்றிருந்த புவியியல் தகவல்களை அடிப்படையாக கொண்டு இந்த உலக உருண்டை தயாரிக்கப்பட்டிருந்த்து. தற்போது இந்த உலக உருண்டை, ஜெர்மனியின் நுரம்பெர்க் நகரில் உள்ள ஜெர்மானிய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**சே. நந்தினிதேவி,**

**இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு**

## நிறங்கள்

சீனாவை அடுத்து கடலின் நிறம் மஞ்சள்!
ஆப்பிரிக்காவுக்கும் அரேபியாவுக்கும் இடையே
கடலின் நிறம் சிவப்பு!
துருக்கி ஓரமாக உள்ள கடலின் நிறம் கருப்பு!
இந்தியாவைச் சுற்றியுள்ள கடலின் நிறம் நீலம்!!

இந்தியாவின் உப்பின் நிறம் வெள்ளை
இங்கிலாந்தில் உப்பின் நிறம் பொன் நிறம்

ஹங்கேரியில் உப்பின் நிறம் இந்திர நீலம்
மோராக்கோவில் உப்பின் நிறம் சிவப்பு!

**த.கௌசல்யா**

தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## சின்னச் சின்ன செய்திகள்

1.இந்தியாவின் முதல் செய்தித் தாள்?

பெங்கால் கெஜட்

2.பவுண்டன்பேனாவைக்கண்டுபிடித்தவர் யார்?

லூயிஸ் இ.வாட்டர்மேன்

3.கழுகினைத் தேசிய சின்னமாகக் கொண்ட நாடு எது?

ஸ்பெயின்

4.மனித மூளையின் பகுதிகள் எத்தனை?

மூன்று பகுதிகள்

5.எந்த நாட்டில் தொடர்ந்து 88 நாட்கள் பகலாகவே இருக்கும்?

நார்வே

6.ரஷியாவின் நாணயம் எந்த பெயரில் அழைக்கப்படுகிது

ரூபிள்

7.மனிதனின் அழகு பற்றி ஆய்வு செய்து படிக்கும் படிப்பின் பெயர் என்ன?

காலோலஜி

8.நமது கைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை தசைகள் உள்ளன?

நூறு

**இரா.சந்தியா**

இளங்கலைத் தமிழ் முதாலாமாண்டு.